## சுருக்கம்

பேரிடர் மேலாண்மை – 2012–2013 ஆம் ஆண்டு வறட்சியின்போது ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டத்தில் பாதிக்கப்பட்டு விடுபட்ட 29 தகுதியுள்ள பயனாளிகளுக்கு வறட்சி நிவாரணம் ரூ.2,04,260/– மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்குவது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பேரிடர் மேலாண்மை அலகு. பே.மே–3(1) பிரிவு**

அரசாணை (நிலை) எண். 255

நாள் 26.05.2020
சார்வரி–வைகாசி 13,
திருவள்ளுவர் ஆண்டு, 2051
படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.123, வருவாய்த் (பே.மே.3(1)) துறை, நாள் 25.04.2013.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.790/2013/ஈ3, நாள் 10.03.2016, 05.05.2018 மற்றும் 24.10.2018.
3. முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித எண்.இ.இ.2(2)/10358/2014, நாள் 05.04.2016.
4. ஆணையர், பேரிடர் மேலாண்மை (பொ), தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடித எண்.இ.இ.2(1)/10358/2014, நாள் 06.10.2018 மற்றும் 04.11.2019

----

**ஆணை:**

மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்கள், நீதிப்பேராணை எண்.7655/2014ல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 05.11.2014 ஆம் நாளிட்ட தீர்ப்பின்படி, ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டத்தில் 2012–2013 ஆம் ஆண்டு வறட்சியின்போது பாதிக்கப்பட்ட 29 தகுதியுள்ள பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்களால் நீதிமன்ற கண்டனத்தை தவிர்க்கும் பொருட்டு, அவசர அவசியம் கருதி மாவட்ட ஆட்சியரின் நிதியிலிருந்து பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.2,04,260/–னை அரசிடமிருந்து பெற்றுத் தருமாறும், அவ்வாறு ஒதுக்கீடு பெற்று வரும் தொகையானது சம்பந்தப்பட்ட அரசுக் கணக்கில் உரிய தலைப்பின் கீழ் மீள செலுத்தப்படும் என்றும் மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்கள் கோரியுள்ளதாகவும், எனவே, இதனை சிறப்பினமாகக் கருதி மேற்படி தொகையினை நிதி ஒதுக்கீடு பெற்றுத் தருமாறு முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

[த.பி.பா]

2. மேற்காணும் முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் நீதிப்பேராணை எண்.7655/2014ல் வழங்கப்பட்ட 05.11.2014 ஆம் நாளிட்ட தீர்ப்பினை உடனடியாக செயல்படுத்தும் வண்ணம், ஈரோடு மாவட்ட ஆட்சியரால் அவசர நிமித்தமாக, ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டத்தில், 2012–2013 ஆம் ஆண்டு வறட்சியின்போது பாதிக்கப்பட்ட 29 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகையினை உரிய அரசுக் கணக்கில் மீள செலுத்த ஏதுவாக ரூ.2,04,260/–னை (ரூபாய் இரண்டு இலட்சத்து நான்காயிரத்து இருநூற்று அறுபது மட்டும்) மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி–2ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> **"2245 இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 01 வறட்சி – 800 ஏனையச் செலவு – மாநிலச் செலவினங்கள் – AF வறட்சியின் காரணமாக ஏற்பட்ட பயிர் இழப்பிற்காக குறு, சிறு மற்றும் பெரு நில உழவர்களுக்கு நிவாரணத் தொகை –309 உதவித் தொகை – 01 நடப்புச் செலவிற்க்கான உதவித் தொகை".**
> **(பழைய த.தொ.கு: 2245–01–800–AF-0915)**
> **(IFHRMS த.தொ.கு. 2245 01 800 AF 30901)**

4. மேலே பத்தி–2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், 2020–2021 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி, மேலே பத்தி–2ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்க முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினத்தை 2020–2021 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துக்களை உரிய நேரத்தில் நிதி (வருவாய்) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதி (வருவாய்) துறையின் அ.சா.எண்.15479/நிதி(வருவாய்).2020, நாள் 18.05.2020ல் பெறப்பட்ட இசைவுடனும், கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.54 (ஐம்பத்தி நான்கு) இன்படியும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**பெறுநர்**

முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–600009.
இயக்குநர் (பேரிடர் மேலாண்மை) (பொறுப்பு), தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை,
சேப்பாக்கம், செ சென்னை–600009.
மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாவட்டம்.
மாவட்ட கருவூல அலுவலர், ஈரோடு.
முதன்மை கணக்காயர், சென்னை–600018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.

[த.பி.பா]

<u>நகல்</u>

கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு
சென்னை–600009.
முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத்துறை அவர்களின் முதன்மை தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
நிதி (வருவாய் / வ.செ–1 / வ.செ.–2) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (அநமு) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.